O.S.No.345/2010

Date:10.10.2018

பிரதிவாதி தரப்பு, சாட்சி 3 - சக்திவேல், த-பெ.மூக்கையன் மூப்பனார்

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

திருவிழா நடத்துவது ஐந்து நிர்வாகம் மற்றும் ஆறு மரியாதைகாரர்களும், ஊர் பொதுமக்களும் சேர்ந்து என்றால் சரிதான். 10ம் பிரதிவாதிக்கு மீன் பிடி குத்தகை ரூ.1,41,000-க்கு ஏலம்விட்டார்கள் என்றால் சரிதான். அதில் ரூ.75000-ஐ அரும்பனூர் கூட்டுறவு வங்கியில் வைப்பீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். 10ம் பிரதிவாதி மூன்று வருட காலத்திற்கு ஏலம் எடுத்தார் என்றால் சரிதான். 2004ல் எடுத்த மீன் பிடி குத்தகைப் பணம் வைப்பீடு செய்யப்பட்டு, மற்ற வருடத்திற்குரிய பணம் ஒப்படைக்கப்பட்டதா என்றால் இல்லை, இரண்டு வருட பணத்தை ஒப்படைக்காதது குறித்து கிராமம் சார்பாக கேட்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் கேட்கப்பட்டது, அவர் ஐந்து நிர்வாகமும் சேர்ந்து வரச் சொன்னார்கள். ஆனால் அதில் ஒரு நிர்வாகம் செய்பவர் வராததால் அதை அப்படியே விட்டுவிட்டார்கள். அந்த பணம் 10ம் பிரதிவாதியிடம்தான் உள்ளது என்றால் அதை அவரிடம்தான் கேட்க வேண்டும் . வைப்பீடு செய்யப்பட்ட பணம் எடுக்கும் போது சிலர் வராமல், காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்ட பின்னர்தான் பணம் எடுக்கப்பட்டது என்றால் புகார் கொடுத்து, கிராமத்தில் பேச்சு வார்த்தை நடத்தப்பட்ட பின்னர்தான் பணம் எடுக்கப்பட்டது. 2004ல் நீதிமன்ற உத்தரவு எதுவும் இருந்ததா என்றால் அவ்வாறு எதுவும் இல்லை. 2004ல் 1 முதல் 4 மற்றும் 10ம் பிரதிவாதிகள் திருவிழா நடத்த முற்பட்டு, அதனால் பிரச்சனை ஏற்பட்டு திருவிழா நடைபெறவில்லை என்றால் சரியல்ல. 5, 6 பிரதிவாதிகளுக்கு மூன்றாவது மரியாதை இல்லை என்று அசல் வழக்கு எண்.632-1987ல் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 5, 6 பிரதிவாதிகளுக்கு ஊருக்கு வடக்கே கோடாங்கி பிடாரன் என்ற மரியாதை உள்ளது என்றாலும, நான் வழக்கிற்காக இல்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. ஊர் பொதுமக்களும் ஐந்து கரை மரியாதைகாரர்களும் சேர்ந்து திருவிழா கொண்டாட வேண்டும் என்றால் சரிதான், ஆனால் 5, 6 பிரதிவாதிகள் இருக்கக்கூடாது. 5, 6 பிரதிவாதிகள் புதுப்பட்டியைச் சேர்ந்தவர்களா என்றால் புதுப்பட்டியை சேர்ந்தவர்கள். வாதி கோரியுள்ள பரிகாரப்படி வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.